ஆனால் அரசுக்கு எதிரான வர்கள் 'அம்மா'வின் அடிவருடிகள் என வர்ணிக்கப்படும் சொற்பமானவர்கள்தான் இதனை பூதாகர மாக்குகிறார்கள். தவறு நடந்திருப்பதாக நினைக்கிறவர்கள் அந்தத் தவறை சரிசெய்ய அரசிடம் முறையிடலாம். அதனைச் செய்யாமல் போராட்டம் நடத்துவதும், போர்க்கொடி உயர்த்துவதுமான செயல்களில் இறங்குகிறபோதுதான் இதன் பின்னணியில் 'தூண்டுதல்' இருப்பதை அறிந்துகொள்ள முடிகிறது. தலைமை ஹாஜி அமைதியாகத் தான் இருக்கிறார்.

ஏனெனில் உண்மை எது என்பது அவருக்குத் தெரியும் என்பதால். ஆனால், சில அடிவருடிகள் அவரை துண்டிவிட்டு இல்லாத ஒன்றை பிரச்சனையாக்குகிறார்கள். அவர்களை சந்தித்து, 'தவறு நடந்திருப்பது உண்மை யானால் அதற்குப் பரிகாரம் செய்யப் படும்.அதற்கான முயற்சியை நானே எடுக்கிறேன் என்றேன். அதனை அவர்கள் ஏற்கவில்லை. அப்படியானால், இவர்களின் சர்ச்சைகளுக்குப் பின்னணி இருப்பதாகத் தானே அர்த்தம்? ஆதாரமற்ற இந்த சர்ச்சை களை நான் பொருட்படுத்தவில்லை.

***மிகப்பெரிய வாரியத்தின் தலைவராகி யிருக்கிறீர்கள். உங்களின் முதல்கட்ட பணி எதுவாக இருக்கும்?***


வாரியத்திற்கு 90 ஆயிரம் கோடி சொத்துகள் இருக்கிறது. இது, முறையற்ற வர்களின் பிடியில் இருப்பதாகக் கருதுகிறேன். தவிர வாரியத்திலும் வாரிய சொத்துகளிலும் மேல்மட்டம் முதல் கீழ்மட்டம்வரை ஊழல்கள் நிறைந்ததாக இருக்கிறது. ஊழல்களில் இருந்து வாரியத்தை மீட்டு, வெளிப்படையான நிர்வாகத்தை தருவது என் முதல் பணி. அடுத்து கல்வி, வேலைவாய்ப்புகளில் தலித் மக்களுக்கும் கீழாக இருக்கிறார்கள் முஸ்லி ம்கள். அந்த மக்களுக்காக மருத்துவம், பொறியியல் துறைகள் அடங்கிய ஒரு பல்கலைக்கழகம் உருவாக்குவது, இங்கு முழுமையாக இஸ்லாமியர்களுக்கு இலவச கல்வி தருவது, சென்னை, திருச்சி, மதுரை, கோவை என முக்கிய 4 மையங்களில் அனைத்து நவீன வசதிகளுடன் கூடிய இலவச மருத்துவமனைகளை அமைப்பது, தொழிற் பயிற்சி கூடங்கள் உருவாக்குவது... இப்படி ஏழை இஸ்லாமியர்களுக்காக பல திட்டங் களை வைத்திருக்கிறேன். எனது பணிக்காலத் தில் இதனை செய்து முடிப்பேன்!

**சந்திப்பு : இளையசெல்வன்**
படம் : அசோக்

"கள் என்ற போதையை எங்களுக்கேற்றிவிட்டு எங்கள் சொந்த நிலங்களையும், ஒடுக்கப்பட்ட எங்களுக்காக கொடுக்கப்பட்ட பஞ்சமி நிலங்களையும் பறித்துக்கொண்டு எங்களை அதல பாதாளத்துல தள்ளி விட்டுவிட்டு முதலாளி களாகிவிட்டன ஆதிக்க சாதிகள்.

இப்போது அதே கள்ளை திரும்பவும் அச்சக்திகள் கொண்டு வர முயற்சிப்பது எங்களை மேலும் அடிமையாக்கத்தான்'' என்று ஆதித்தமிழர் பேரவை சார்பாக கோவை செஞ்சிலுவை சங்கத்தின் முன்பு, அருந்ததியர்கள் நடத்திய கண்டன ஆர்ப் பாட்டம்... கள் இறக்கியே தீருவோம் என்று தீவிரமாகியிருக்கும் கவுண்டர்களின் மனவுறுதியை கொஞ்சம் அசைத்துப் போட்டிருக்கிறது என்பது உண்மைதான்.

ஆர்ப்பாட்டத்திற்கு பின் ஆதித் தமிழர் பேரவையின் நிறுவனத் தலைவரான அதிய மான் நம்மிடம்... "ஒரு பெரிய ஏமாற்றுத்தனம் மீண்டும் நிகழவிருப்பதின் அபாயத்தை அனுபவித்தவர்கள் என்பதால்தான் இந்த ஆர்ப்பாட்டத்தை நாங்கள் நடத்தியிருக்கி றோம்.


அதியமான்


ஈஸ்வரன்

முன்னொரு காலத்தில் மிரட்டியோ... பசப்பு வார்த்தை யாலோ, ஒருவனை அடிமைப் படுத்தி விட முடியாது என்ப தைப் புரிந்து கொண்ட ஆதிக்க சாதியினர் ஒடுக்கப் பட்டவர்களை நோக்கி கள் போதை என்ற வலையை வீசினார்கள். 'கள் குடித்தால் உடம்புக்கு நல்லது' என்று நம்ப வைத்தார்கள்.

அவ்வலையில் மாட்டிக் கொண்டு போதையின் உச்சி யில் நாங்களிருந்த போது நய வஞ்சகமாக கைரேகைகளின் மூலம் எங்களின் நிலங்களை சொந்தமாக்கிக் கொண்டார்கள். அப்போது அவர்கள் பழக்கிவிட்ட போதையை விட முடியாத கணவன்களை படாதபாடுபட்டு திருத்தினார்கள் ஏழைத் தாய்மார்கள். ஆனால் இப்போது நாங்கள் பூரண மது விலக்கை கோரிக் கொண்டிருக்கிற நிலையில் மீண்டும் கள்ளை இறக்க அனுமதி தந்தால் அத்தாய் மார்கள் வாயிலும், வயிற்றிலும் அடித்துக் கொண்டு இறப்பதைத் தவிர வேறு வழியே யில்லைதான். பாடப் புத்தகங்களைத் தூக்கிக் கொண்டு பள்ளிக்கூடங்கள் போய்க் கொண்டிருக்கும் எங்கள் குழந்தைகளும்




கண்டன ஆர்ப்பாட்டம்



# "கள் இறக்க விடமாட்டோம்"

## -கொதிக்கும் அருந்ததியர்கள்!

பழையபடி பண்ணை வேலைக்குப் போக வேண்டியிருக்கும்.

உண்மையிலேயே கள் குடித்தால் சிறுநீரக கல் அடைப்பு, நரம்புத் தளர்ச்சி, சிறுமூளை பாதிப்பு, கண் பாதிப்பு என இன்னும் பலவிதமான நோய்கள் தாக்கும் இத்தகைய அபாயமுள்ள கள்ளை, சுய நலத்துக்காக 'கள் குடித்தால் உடம்புக்கு நல்லது' என்ற ஆகாசப் பொய்யை அவிழ்த்து விட்டுக்கொண்டிருக்கிறது ஆளும் வர்க்கம்.

கள் இறக்கினால்... மனிதனுக்கு சூடு தணிக்கும் பல வைட்டமின்களையும், மருத்துவ குணங்களையும் கொடுத்துக் கொண்டிருக்கும் இளநீர் கிடைக்காது.

அதனால் 3 இலட்சம் இளநீர் வியாபாரிகளின் நிலையும், மட்டை உரிக்கும் தொழிலாளிகள், தேங்காய் பருப்பு எடுக்கும் தொழிலாளிகள் தொடங்கி, தேங்காய் எண்ணெய் ஆட்டும் ஆலைகள், நார் உரிக்கும் தொழிலாளர்கள் என 30 இலட்சத்திற்கும் மேற்பட்டவர்களின் குடும்பங்கள் வறுமையின் கோரத்தை அனுபவிக்க வேண்டியதிருக்கும்.

போதையில் நாங்கள் இழந்த 2.5 இலட்சம் ஏக்கர் பஞ்சமி நிலங்களைப் பறிகொடுத்து விட்டு ஊரின் ஒதுக்குப் புறத்தில் ஒண்டியிருக்கும் எங்களின் குடிசையையும் பிடுங்கத்தான் இப்போது மறுபடியும் கள் இறக்குவோம் என்ற கோஷத்தை எழுப்பிக்கொண்டிருக்கிறார்கள் விவசாயிகள் என்ற பெயரில் உள்ள முதலாளிகள்.

ஆக மொத்தம் அருந்ததிய மக்களின் ஒப்பாரிச் சத்தத்தில் எக்காளமிட நினைக்கும் ஆதிக்க சாதிகள்கள் இறக்குவதை நிறுத்த வேண்டும். இல்லையென்றால் கொங்கு மண்டலம் முழுதும் ஆதித்தமிழர் பேரவையின் சார்பாக ஆர்ப்பாட்டம் நடத்தப்படும்" என்றார் கோபமாய்.

அருந்ததியர்கள் தரப்பின் 'கள் இறக்கக்கூடாது' என்ற ஆர்ப்பாட்டத்தையொட்டி அவர்கள் வைத்த கருத்துக்களை கள் இறக்குவதில் தீவிரங் காட்டும் கொங்கு நாடு முன்னேற்றக் கழகத்தின் செயலாளர் ஈஸ்வரன் அவர்களிடம் வைத்தோம்... "இயற்கையாய் கிடைக்கக்கூடிய கள் உடலுக்குச் சிறந்தது என்பதில் மாற்றுக் கருத்தே கிடையாது.

டாஸ்மாக் சரக்குகள் மனிதனைத் தின்று கொண்டிருக்கின்றன. கள்ளு குடிச்சா வாழ்க்கைத்தரம் கீழ போகுதுன்னு சொல்றவங்க டாஸ்மாக் சரக்குக் குடிச்சா மட்டும் வாழ்க்கைத் தரம் உயர்ந்துருதா?

ஏன்... ஆதிக்கசக்திகள் கள் கொடுத்துத்தான் அவர்களை ஏமாற்ற வேண்டுமா? தேவையில்லாமல் யாரோ சில பேரின் தூண்டுதலின் பேரிலேயே அருந்ததிய மக்கள் ஆர்ப்பாட்டத்தில் இறங்கியிருக்கிறார்கள். நாங்கள் கண்டிப்பாய் கள் இறக்க அரசிடமிருந்து அனுமதி வாங்குவோம்" என்றார் படபடப்பாய்.

எப்படியோ கள் பிரச்சனை போகக்கூடாத வேறொரு திசையை நோக்கி பயணித்துக் கொண்டிருக்கிறது என்பது புரிகிறது. அதற்குள் இந்த கள் பிரச்சனைக்கு நல்லதொரு தீர்வைத் தர வேண்டும் தமிழக அரசு.

அ.அருள்குமார்



தடை மீறி கள் விற்பதை கண்டித்தும், முழு மதுவிலக்கு அமல்படுத்த கோரியும் ஆதித்தமிழர் பேரவை சார்பில் கோவை செஞ்சிலுவை சங்கம் முன் இன்று ஆர்ப்பாட்டம் நடந்தது. நிறுவன தலைவர் அதியமான் உட்பட ஏராளமானோர் பங்கேற்றனர்.

தமிழ்முரசு கோவை, 10 JUNE 2004




தடை மீறி கள் விற்பதை கண்டித்தும், முழு மதுவிலக்கு அமல்படுத்த கோரியும் ஆதித்தமிழர் பேரவை சார்பில் கோவை செஞ்சிலுவை சங்கம் முன் ஆர்ப்பாட்டம் நடந்தது. நிறுவன தலைவர் அதியமான் உட்பட ஏராளமானோர் பங்கேற்றனர்.

தினகரன், கோவை, 11-JUNE-2009

தீக்கதிர், கோவை
11-June 2009

# 'கள்' விற்பனைக்கு தடை கோரி கோவையில் ஆதித்தமிழர் பேரவை ஆர்ப்பாட்டம்



கோவை, ஜூன் 10-

சட்டத்திற்கு புறம்பாக நடைபெறும் கள் விற்பனையை தடை செய்திட வேண்டுமென வலியுறுத்தி கோவையில் ஆதித்தமிழர் பேரவையின் சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

கோவை செஞ்சிலுவை சங்கம் முன்பு புதனன்று நடைபெற்ற ஆர்ப்பாட்டத்திற்கு ஆதித்தமிழர் பேரவையின் மேற்கு மண்டல செயலாளர் தி.செ.கோபால் தலைமை வகித்தார். பேரவையின் நிறுவனத் தலைவர் இரா.அதியமான் கண்டன உரையாற்றினார்.

பொதுவாக கள் இறக்கப்படும் தென்னை மரத்தில் இருந்து சத்தான இளநீர் கிடைக்காது, சமையலுக்கு சத்தான தேங்காய் கிடைக்காது. மட்டை உரிக்கும் தொழில், தேங்காய் பருப்பு எடுப்பது, எண்ணெய் எடுப்பது, கால்நடை தீவன உற்பத்தியாளர்கள், நார் உரிக்கும் தொழிலாளர்கள் இதனால் கடுமையாக பாதிக்கப்படுவர். மேலும் சாதாரண உழைக்கும் மக்கள் கள் குடிப்பதால் சிறுநீரக கல் அடைப்பு, கல்லீரல் பாதிப்பு, சிறுமூளை பாதிப்பு உள்ளிட்ட பாதிப்புகளுக்கும் உள்ளாகும் அபாயம் உண்டு.

மேலும் ஒடுக்கப்பட்ட மக்களை பொருளாதார ரீதியாக மேலும் கீழ் நிலைக்கு தள்ளும் அபாயம் உள்ளது. எனவே சமுதாயத்தை பாழ்படுத்தும் கள் விற்பனையை தடை செய்ய வேண்டும் என்று வலியுறுத்தி ஆர்ப்பாட்டத்தில் முழக்கங்கள் எழுப்பினர்.

போராட்டத்தில் ஆதித்தமிழர் பேரவையின் பொதுச் செயலாளர் சுப. இளங்கோவன், துணை பொதுச் செயலாளர் தீபா மற்றும் பெருமாவளவன், இராசராசன், மணிமாறன், பெரியார் தாசன் உள்ளிட்டோர் உரையாற்றினர். ஆர்ப்பாட்டத்தில் நூற்றுக்கும் மேற்பட்ட அமைப்பின் ஊழியர்கள், பொது மக்கள் பங்கேற்றனர்.

ஆதித்தமிழர் பேரவை சார்பில்

# 'கள்' இறக்குவதற்கு எதிராக ஆர்ப்பாட்டம்

கோவை, ஜூன். 10–

ஆதித்தமிழர் பேரவை சார்பில் தடையை மீறி 'கள்' விற்பனை செய்வதை கண்டித்து அதை தடை செய்ய கோரியும், முழு மது விலக்கை அமல்படுத்த கோரியும் செஞ்சிலுவை சங்கம் முன்பு ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

ஆர்ப்பாட்டத்திற்கு மேற்கு மண்டல செயலாளர் கோபால் தலைமை தாங்கினார். பேரவையின் நிறுவன தலைவர் அதியமான் கலந்து கொண்டு பேசினார். பொது செயலாளர் இளங்கோவன் மற்றும் நிர்வாகிகள் பெருமாவளவன், ராஜராசன், மணிமாறன், பெரியார்தாசன், மற்றும் நிர்வாகிகள் உள்பட ஏராளமானவர்கள் கலந்து கொண்டனர்.

மாலைமலர், கோவை, 10 June 2009

# கள் இறக்க அரசு அனுமதி?

கள் பிரச்சனையால் இப்போது கோவை மாவட்டம் உச்சி போதையேறி தள்ளாடிக் கொண்டிருக்கிறது. 'கால அவகாசம் தருகிறோம். அதற்குள் கள் இறக்குவதை விவசாயிகள் நிறுத்த வேண்டும். இல்லையென்றால் கள் இறக்கும் அத்தனை பேரும் கைது செய்யப்படுவார்கள். அவர்களின் மீது கடுமையான செக்ஷன்களில் வழக்குப் பதிவு செய்யப்படும்' என்று கோவை மாவட்ட எஸ்.பி. கண்ணன் எச்சரிக்கை விடுத்தும் விவசாயிகள் யாரும் அதை பொருட்படுத்தாமல் கள் இறக்கியதையடுத்து, தோட்டத்திற்குள் அதிரடி ரெய்டு புகுந்து கள் பானைகளை அடித்து நொறுக்கியெடுக்கிறது போலீஸ்.

அப்போதே தோப்புக்குச் சொந்தக்காரர்கள் கைது செய்யப்பட்டு ரிமாண்ட் வைக்கப்படுவதும், கைது செய்தவர்களை விடுவிக்கக் கோரி போலீஸ் ஸ்டேஷனை முற்றுகையிடுபவர்களும் கைது செய்யப்படுவதால் உச்சகட்ட பரபரப்பில் இருக்கிறது கோவை. இதுவரை கோவை மாவட்டப் பகுதிகளில் 81 பேர் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். இந்த சம்பவங்களையடுத்து கள் இறக்கிய சில தோப்புகளின் உரிமையாளர்களை சந்தித்துப் பேச... குமுறிவிட்டார்கள்.

நாங்க விவசாயிகளா பொறந்ததுதான் தப்பாப் போச்சுங்க... நாங்க போட்ட வாழை, கரும்பு நெல்லு எல்லாத்தையும் யானைகளும், காட்டுப் பன்னிகளும் சேதம் பண்ணி இலட்சக்கணக்குல நஷ்டப்பட்டப்போ இந்த அரசாங்கம் எங்களுக்கு 10,000, 15,000-ம் மட்டும்தான் நஷ்ட ஈடா கொடுத்துச்சு.

சுதந்திரங் கெடைச்சதுலயிருந்து இப்பவரைக்கும் தேங்காய், பால், அரிசி, பருப்புன்னு வியாபாரிக்கு விக்கிற எந்த விவசாயியாவது வெலை நிர்ணயம் பண்ணிருக்கானா? மொத மொதலா இந்த மூணு மாசமா கள்ளுக்கு மட்டும்தான் லிட்டர் முப்பது ரூபாய், நாப்பது ரூபாய்ன்னு நாங்களே வெலைய நிர்ணயம் பண்ணி வித்தோம்.

எங்க பொண்டு, புள்ளைகயெல்லாம் இந்த மூணு மாசம்தான் நிம்மதியா இருந்தாங்க. இப்ப அதுக்கும்



போலீசின் அதிரடி ரெய்டு


வேட்டு வெச்சிருச்சுங்க போலீஸ்'' என்று புலம்புகிறார் பன்னிமடையைச் சேர்ந்த மருதாசலம்.

தாய்ப்பால் எப்படி தூய்மையானதோ அதே போலத்தான் கள்ளும். இதக் குடிச்சவங்களுக்கு உடம்பு நல்லா இருக்கு. மலச்சிக்கல் இருக்காது. அப்படிப்பட்ட இந்தக் கள்ள ஒரு மரத்துலயிருந்து தெனமும் ஒன்றரை லிட்டர்தான் எடுக்க முடியும். 40 மரத்துல கலயத்த கட்னம்னா 60 லிட்டர் கிடைக்கும். லிட்டர் 40 ரூபாய்னு விக்கிறோம். மரம் ஏர்றவங்களுக்கு லிட்டருக்கு பத்து ரூபா குடுத்துருவோம். ஒருநாளைக்கு 1000, 1500 பாத்துட்டிருந்த எங்க பொழைப்புல மண்ணப் போட்டுட்டாங்க.

களை எடுக்க 80 ரூபா, 90 ரூபாய்னு சம்பளம் வாங்கிட்டிருந்தவங்க மரம் ஏறி 250, 300ன்னு காசு பாத்துட்டு இருந்ததையும் கெடுத்துட்டாங்க. 100 லிட்டர் இறக்குனதா இருந்தாத்தான் ஸ்ட்ராங்கா கேஸ் போட முடியும்ங்கறதால 100 லிட்டருக்கு மேல இறக்கி வித்துட்டிருந்ததா எல்லாத்து மேலயும் பொய் கேஸ் போடறாங்க போலீஸ்காரங்க" என்கின்றன பெரிய தோட்டம் ராஜேந்திரனும், மருதாசலமும்.

"42 பர்சன்ட் அதிகமா ஆல்கஹால் இருக்குற டாஸ்மாக் சரக்குகளை குடிக்கறதுக்கு மூலை, மூலைக்கு கடைய திறந்து ஊக்கப்படுத்துற அரசாங்கம், நாலே பர்சன்ட் ஆல்கஹால் இருக்குற கள்ளுக்கு மட்டும் ஏன் தடை போடுதுன்னு தெரியலீங்களே?

எலக்ஷனுக்கு முன்னாடி கள்ளு இறக்குறதப் பத்தி கண்டுக்காத போலீஸ்காரங்க எலக்ஷன் முடிஞ்சதுமே தோப்புக்குள்ள புகுந்து கள்ளு கலயத்தை எல்லாம் அடிச்சு ஒடைச்சு ஏன் இந்தளவுக்கு கெடுபிடியா நடந்துக்கறாங்கன்னும் தெரியலையே?


ஈஸ்வரன்


பெஸ்ட் ராமசாமி


கடும் நடவடிக்கை எஸ்.பி.கண்ணன்

ஒரு வேள அரசாங்கம் மரத்துக்கு இவ்வளவு வரி கட்டுங்கன்னு சொன்னாக் கூட கட்டிட்டுப் போக தயாராத்தான் இருக்கறோம். ஆனா ஒண்ணுங்க. எங்களோட கோரிக்கையான கள்ளு இறக்குறதுக்கு அரசாங்கம் அனுமதி கொடுக்கோணும். இல்லேன்னா எல்லா விவசாயிகளும் குடும்பத்தோட தற்கொலை பண்ணிக்கறத தவிர வேற வழியே இல்லைங்க" என்று வெம்புகிறார் கொய்யாத் தோட்டத்து உரிமையாளரும் தடாகம் பகுதியின் கள் இயக்க சங்கத் தலைவருமான ராஜகோபால்.

இதையொட்டி கள் இறக்கியே தீருவோம் என்று முனைப்புடன் இருக்கும் கொங்கு நாடு முன்னேற்றக் கழகத்தின் பெஸ்ட் ராமசாமி, ஈஸ்வரன் ஆகியோரிடம் பேசினோம்... "கள் இறக்குவதை விட்டு விட்டு பேச்சுவார்த்தைக்கு வாருங்கள் என அரசாங்கம் சொன்னதையொட்டி இப்போது தற்காலிகமாக கள் இறக்குவதை நிறுத்தி வைத்திருக்கிறோம்.

அதே போல கள் இறக்கிய விவசாயிகளை கைது செய்வது கண்டனத்துக்குரியது. வரும் வாரத்தில் கலைஞரை சந்தித்து பேசவிருக்கிறோம். கண்டிப்பாக விவசாயிகளை நாங்கள் கைவிட மாட்டோம். கள் இறக்க அனுமதி வாங்குவோம்" என்கிறார்கள் உறுதியாய்.


அனுமதிக்காவிட்டால் தற்கொலை "ராஜகோபால்


மருதாசலம்


ராஜேந்திரன்

தோப்புகளில் அதிரடி ரெய்டுகள் நடத்தி கள் இறக்கும் விவசாயிகளை கலங்கடிக்கும் எஸ்.பி. கண்ணனிடம் இது குறித்து கேட்டோம்.

"தேர்தலுக்கு முன்னால யிருந்தே கள் இறக்கக் கூடாதுன்னு நாங்க சொல்லிக்கிட்டுத்தான் இருந்தோம்... எலக்ஷன் சமயத்துல தேர்தலை நல்லபடியா நடத்தணும்ங்கறது தான் எங்களோட குறிக்கோளா இருந்துச்சு. இப்பவும் கைது செய்றதுக்கு முன்னாடியே விவசாயிகளுக்கு எச்சரிக்கை, அறிவுரை கொடுத்தும் சட்டத்த மீறுனவங்களைத்தான் கைது பண்ணியிருக்கறோம். சரியான பிரிவுகளில்தான் வழக்கைப் பதிவு செய்திருக்கிறோம். இப்ப விவசாயிகளுக்காக அரசாங்கம் சார்பா குழு அமைச்சிருக்காங்க. பேசி தீர்த்துக்கங்கன்னு சொல்லியிருக்கோம். அதுவரை சட்டத்தை மீறுபவர்கள் கண்டிப்பாக கைது செய்யப்படுவார்கள்" என்றார்.

நாடாளுமன்றத் தேர்தல் வாக்குப்பதிவுக்கு சில நாட்கள் முன்பாக தென்னை, பனை விவசாயிகளின் கள் இறக்கும் கோரிக்கை பற்றி பரிசீலிக்கப்படும் என்றார் முதல்வர். மே-31-ந்தேதி வெளியான தமிழக அரசின் அறிக்கையில், கள் இறக்க ஆவன செய்வது பற்றி நீதிபதி சிவசுப்பிரமணியம் தலைமையிலான குழு அமைக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது. உடலுக்கு தீங்கு ஏற்படாத வகையிலும் போதை மாத்திரைகளை கலக்காமலும் கள் விற்பனையை அனுமதிப்பதில் என்ன தவறு என்ற ரீதியில்தான் இக்குழுவின் முதல் கட்ட ஆய்வு தொடங்குகிறது.

-அ.அருள்குமார்